[27th September 1958

Water scarcity in Periyakulam taluk

*554 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா, கண்டமராக்கனூர் ஜமீன், ஓடைப்பட்டி, சீப்பாலக்கோட்டை, ஜங்காலபட்டி, தாழச்சேரி, கொடுவிளைப் பட்டி ஆகிய ரெவின்யு கிராமங்களில் தண்ணீர் கஷ்டம் நீங்க சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Proposals for the deppening of wells in Seepalakottai, Thadicheri and Jangalpatti have been taken up. Construction of an overhead tank at Koduvilaipatti has been sanctioned. Wells have been constructed for Gandamanickanur and Odaipatti.

SRI N. R. THIAGARAJAN : இந்த ராஜ்யத்திலே இந்தப் பகுதியிலே, எங்கும் இல்லாத வகையில், 120 அடிக்குக் கீழே நீர்மட்டம் போய் விட்டது. பதிலிலே கூறப்பட்ட இரண்டு, மூன்று கிராமங்களைத் தவிர, 10, 15 கிராமங்களிலே குடி தண்ணீருக்காக மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். பொதுவாக, இந்தப் பிராந்தியத்திற்கு ஒரு திட்டம் போட முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜில்லாவில் நடந்த பிளானிங் கமிட்டி கூட்டத்திலே வைகையாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து இந்த மாதிரி கிராமங்களுக்கு கொடுப்பது சாத்தியமா என்று பரிசீலனை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

SRI N. MAHALINGAM : In view of the fact that under the National Rural Water-supply Scheme, 1·4 crores of rupees have been allotted to our State and that the money is not being spent because only four districts are permitted to spend that amount, will the Government represent to the Central Government to extend the National Rural Water-supply Scheme to the whole State?

MR. SPEAKER : The hon. Member must put a separate question. However, if the Hon. Minister is going to reply, I have no objection.

THE HON. SRI M. A. MANICKAVELU : It was not only represented to the Government of India but it was pressed very hard also. But still, the Centre does not agree to it.

SRI A. GOVINDASAMY : இந்தத் தண்ணீர் இல்லாத பகுதி களுக்கு வைகையிலிருந்து தண்ணீர் கொடுக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வைகையிலிருந்து இந்தப் பகுதிக்கு எந்த முறையில் தண்ணீர் கொண்டு வருவதாக அரசாங்கம் முயற்சிக்கப் போகி றார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும் என்பதுதான் இப்பொழுதுள்ள யோசனை.

Location of all Government Offices in the Fort St. George

*555 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நகரின் பல இடங்களிலும் உள்ள சென்னை சர்க்கார் காரியாலயங்களை கோட்டையிலேயே வைத்துக்கொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.